உயர்த்திக் கொடுத்திருக்கிறது. ஆகவே, மிகப் பெரிய வளர்ச்சியை இன்றைக்கு செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி பெற்றிருக்கிறது. ரூ.100 கோடி அளவிற்கு Yoga and Naturopathy Centre அமைக்கவிருக்கிறோம். அதனால், எங்கள் அரசுக்கு appreciation இல்லையென்றாலும், நீங்கள் குற்றச்சாட்டுகளைச் சொல்வது சற்று வருத்தமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேஷ் குமார், உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

153—

புதிய மாவட்டம்

***35770—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பட்டுக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் புதிய மாவட்டம் உருவாக்குவதற்கான அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதன்படி, புதிதாக உருவாக்கப்படும் மாவட்டத்திற்கு, பரப்பளவு குறைந்த அளவு 2,500 சதுர கிலோ மீட்டரிலிருந்து 9,000 சதுர கிலோ மீட்டரும், மக்கள்தொகை குறைந்த அளவு 10 இலட்சத்திலிருந்து 30 இலட்சமும், குறைந்தது இரண்டு கோட்டங்களும், 5 வட்டங்களும் மற்றும் 200

வருவாய் கிராமங்களும் இருக்க வேண்டும் என்கின்ற அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் கொள்கை முடிவைச் சார்ந்தது ஆகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி காப்பாளர், விவசாயிகளின் விடிவெள்ளி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பட்டுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் அமைக்க வேண்டுமென்று நான் கோரியிருக்கிறேன். காரணம், பட்டுக்கோட்டையின் தென்கடைக் கோடியில் இருக்கும் பேராவூரணி தொகுதியிலிருந்தும் சரி, பட்டுக்கோட்டையிலிருந்தும் சரி, மாவட்டத் தலைமையிடமாக இருக்கக்கூடிய தஞ்சாவூர் செல்வதற்கு மிக அதிக நேரம் செலவாகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பேராவூரணி பகுதியிலிருந்து தஞ்சாவூருக்குச் செல்வதற்கு 100 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. இதனால், ஏழை, எளிய மக்களும், வறுமைக்கோட்டின் விளிம்பில் இருக்கும் மக்களும், மாவட்டத் தலைமையிடத்துக்குச் சென்று அரசின் உதவிகளைப் பெறுவதற்கோ அல்லது அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கோ மிகவும் கஷ்டமாக இருப்பதால், மையப் பகுதியாக விளங்கும் பட்டுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய மாவட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தினுடைய மொத்த பரப்பளவு 3,396.53 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மக்கள்தொகை 16,67,809 ஆகவும், வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை 3 ஆகவும், வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை 9 ஆகவும், வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை 754 ஆகவும் உள்ளன. எனவே, மேற்படி வருவாய்த் துறையின் அரசாணையில்உள்ளஅளவுகோல்களின்படி,தஞ்சாவூர்மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, பட்டுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைத்திடும்பட்சத்தில், கிராமங்களின் எண்ணிக்கை குறித்த அளவுகோல்கள் மட்டுமே பூர்த்தியாகின்றன; மற்ற அளவுகோல்கள் பூர்த்தியாகவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, பழைய சென்னை மாகாணத்தில் 13 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அதற்கு பிறகு பல்வேறு காலகட்டங்களிலே புதிய மாவட்டங்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசிலும்கூட உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிலேதான், புரட்சித் தலைவரும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், 10 புதிய மாவட்டங்களை உருவாக்கித் தந்து, ஒரு புதிய வரலாற்றைப் படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களது வழியில் வந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே வைத்த கோரிக்கைகளை ஏற்று, மக்கள் வைத்த கோரிக்கைகளை ஏற்று, ஒரே ஆண்டிலே 5 புதிய மாவட்டங்களை உருவாக்கி, சரித்திர சாதனையை வருவாய்த் துறையிலே படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய நலனுக்காக, மக்கள் நலன் சார்ந்திருக்கிற திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, மாவட்டங்களைப் பிரிப்பதற்கான அறிவிப்புகளை வெளியிட்டு, அவற்றைச் செயல்பாட்டிற்கும் கொண்டு வந்து, மிக விரைவிலேயே அவற்றிற்கான கட்டடங்களைக் கட்டுவதற்கு பூமி பூஜையும் போட்டு, ஒரு சரித்திர சாதனையை படைத்து, வருவாய்த் துறையிலே இதனை ஒரு மைல் கல்லாக, அம்மாவின் அரசின் மூலமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்

என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட இந்த நாட்டிலுள்ள அனைவரும் நன்கு அறிவார்கள். ஆகவே, தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கோரிக்கை, கொள்கைரீதியாக எடுக்கப்பட வேண்டிய முடிவு என்கின்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களது கோரிக்கை ஒன்றும்கூட நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆம்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: ஆகவே, இதுபோன்ற கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கின்ற அந்தக் கடமையை சரியாகச் செய்வேன் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மகிழ்ச்சியாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை வட்டம் என்பது 175 வருவாய்க் கிராமங்களைக் கொண்ட மிகப் பெரிய வட்டமாகும். எனவே, பட்டுக்கோட்டை வட்டத்தை கிழக்கு, மேற்கு என்று இரண்டாகப் பிரித்து, இரண்டு வட்டங்களாக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக வட்டங்கள் மற்றும் கோட்டங்களைப்பிரிப்பதற்கு,வருவாய்க்கிராமங்கள்,மக்கள் தொகை,

2020 மார்ச் 21]

பரப்பளவு போன்ற அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, அந்த அளவுகோல்களைப் பூர்த்தி செய்கின்றபட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். சென்னை மாவட்டத்தில் மொத்தம் 16 சட்டமன்றத் தொகுதிகள் ஏற்கெனவே இருந்த நிலையில், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலிருந்து 6 தொகுதிகள் கூடுதலாக இணைந்து, தற்போது சென்னை மாவட்டத்தில் 22 தொகுதிகள் உள்ளன. எனவே, நிருவாக வசதியினை கருத்திலே கொண்டு, அவற்றைப் பிரிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நிருவாகச் சீர்திருத்தத்திற்காக, சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்கு இணையாக வருவாய்த் துறையினுடைய எல்லையையும் உருவாக்கினார்கள். அந்த அடிப்படையிலே, தொகுதிகளினுடைய எண்ணிக்கையும் தற்போது உயர்ந்திருக்கிறது. திருவள்ளூர் மாவட்டத்திலிருந்தும், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்தும் சில தொகுதிகள் சென்னை வருவாய் மாவட்டத்திலே இணைக்கப்பட்டுவிட்ட காரணத்தால், 22 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியதாக சென்னை வருவாய் மாவட்டம் இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் நலன் சார்ந்திருக்கிற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார். ஏனென்றால், நம்முடைய தாய்த் தமிழகத்தின் தலைமையாக இருக்கிற சென்னை மாநகரிலே மக்கள் நலன் சார்ந்திருக்கிற திட்டங்களை விரைவாகக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமென்கிற எண்ணத்தில்தான், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுடைய அந்தக் கோரிக்கையைத்தான், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனினும், இதுகுறித்து, கொள்கைரீதியாகத்தான் முடிவு எடுக்க முடியும் என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

154—

சார்–பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடம்

***49707—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி மற்றும் புதுப்பேட்டையில் உள்ள சார்–பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி மற்றும் புதுப்பேட்டையில் சார்–பதிவாளர் அலுவலகங்கள், அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்களில் முறையாகப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சார்–பதிவாளர் அலுவலகங்கள் நல்ல நிலையில் செயல்பாட்டில் உள்ளன. எனவே, பண்ருட்டி மற்றும் புதுப்பேட்டையில்